மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 5

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**மார்ச் 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 மார்ச்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

ஆதி.28:15 **நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.**

கரூர் மாவட்டம் – S.M.புரம் **சின்னபனையூர்** கிராமத்தில் ‘COM **இம்மானுவேல் ஜெபவீடு**’ **10.02.2009** செவ்வாய் அன்று தேவனுடைய மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**Thanks :**

***Pastor GIE & Family, U.K.***
***& COM - Well Wishers***



# ✷ இயேசு கிறிஸ்துவே கர்த்தர் ✷

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**Chief Executive officer** **Letter Dated: 12.02. 2009**



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோரதர, சகோதரிகளே!

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பெரிதான கிருபையினால் பல சபைகளிலிருந்து 54 தன்னார்வ ஊழியர்கள் உதவியுடன் திருச்சுளி யூனியனில் 10,000 இல்லங்களை ஜனவரி மாதத்தில் சந்திக்க தேவன் கிருபை செய்தார்.

TVGM ஸ்தாபகர் சிங்கப்பூர் செல்லவும், அங்கு அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் தேவன் கிருபை செய்தார்.

இந்த மாத இறுதியில் ஒரிஸாவிலுள்ள பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு செல்ல இருக்கிறோம். இந்த பிரயாணத்திற்காக விசேஷமாக ஜெபியுங்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் வழக்கம்போல ஒரு மாத சீஷத்துவப் பயிற்சி 2009 ஏப்ரல் 25 முதல் மே 31 வரை நடத்த உள்ளோம்.

மேலும் ஒரு வாரம் தலைமைத்துவப் பயிற்சி திருச்சி TVGM தலைமை அலுவலகத்தில் நடத்த ஜெபித்து ஆலோசித்து வருகிறோம். ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,

***Stephen Christopher***

**கரூர் மாவட்டம் – சின்னபனையூர் 'இம்மானுவேல் ஜெபவீட்டை' சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் ஜெபிக்க, COM- Director 10.02.09 அன்று திறந்து வைத்தார்கள். சகோ.P.T.கிறிஸ்டோபர் ( TVGM ஸ்தாபகர் ) தேவசெய்தியை பகிர்ந்து கொண்டார்கள்.**





# நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை. ஆதி.28:15

வாக்குத்தத்த செய்தி

2009 மார்ச் மாதத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் தேவ பிள்ளைகளே!

கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்: ஆதி.28:15

**நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.**

ஆம்! இதை வேதத்தில் தேவன் யாக்கோபுக்கு கொடுத்த வாக்குத் தத்தமாக நாம் வாசிக்கிறோம்.

எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!

யாக்கோபின் தேவன் நம்முடைய தேவன். அதனால் தான் இந்த வாக்குத்தத்தத்தை அவர் நமக்கும் கொடுக்கிறார்.

எனவே கர்த்தர் வழிநடத்துகிறவர், வழி காட்டுகிறவர், ஆலோசனை தருகிறவர், ஆசீர்வதிக்கிறவர், ஜெபத்தைக் கேட்கிறவர், பதில் கொடுக்கிறவர், ஜீவனுள்ள தேவன், கைவிடாதவர் என்றெல்லாம் தெரிந்து விசுவாசத்துடன் இருந்த யாக்கோபைப் போல நாமும் காணப்படுவோம்.

**'உன்னைக் கைவிடுவதில்லை'** என்று யாக்கோபை பார்த்து கூறின தேவன் இன்று உங்களைப் பார்த்தும் கூறுகிறார். எனவே கவலைப்படாதீர்கள். உங்கள் சூழ்நிலைகளை அறிந்த தேவன், உங்கள் பிரச்சனைகளை அறிந்திருக்கிறார். உங்கள் புலம்பல், அங்கலாய்ப்பு எல்லாம் தெரிந்தவர் உங்களை கைவிடவே மாட்டார்.

**ஆதி:**28:1-4 ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல்,

எழுந்து புறப்பட்டு பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான். சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி . . . ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக என்று சொல்லி ஈசாக்கு யாக்கோபை அனுப்பி விட்டான்.

போகும் வழியில் சூரியன் அஸ்தமித்தபடியினால் அங்கே ராத்தங்கி ஒரு கல்லை தலையின் கீழ் வைத்து நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான். அப்பொழுது யாக்கோபு கண்ட சொப்பனத்தை **ஆதி.**28:11-15 வசனங்களில் வாசிக்கிறோம்.

அங்கே கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதிப்பதை காண்கிறோம். நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி

பூமியின் தூளைப் போலிருக்கும்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்குத் திரும்பி வரப்பண்ணுவேன். **நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.** என்றார்.

ஆம்! தேவனுடைய பிள்ளைகளே! நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **யாக்கோபை தெரிந்தெடுத்தார். அவரது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற முன் குறித்துள்ளார்.**

அதனால் தான் அவன் சோர்ந்து போன வேளையிலே, அவனுக்கு சத்துவத்தைக் கொடுத்து, இப்படியாக வாக்குக் கொடுக்கிறார்.

**நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.**

இந்த தேவ வார்த்தை அவனுக்குள் நம்பிக்கையை கொண்டு வந்தது. எனவே தான் அவனது கலக்கத்தின் நடுவிலும் விசுவாசத்தோடு சொல்கிறான்: **ஆதி:**28:20-22 தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார். நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனைப் பண்ணிக் கொண்டான்.

எனக்கன்பான தேவ ஊழியர்களே! சகோதர, சகோதரிகளே!

ஒரு நிமிடம் சிந்திப்போம். உங்கள் சொந்த ஊரை விட்டு, அல்லது தேசத்தை விட்டு சென்றுள்ளீர்களா ? உங்கள் நிலைமை எப்படியுள்ளது ? உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். உங்களை காப்பாற்ற வல்லவர். உண்ணவும், உடுக்கவும் தர வல்லவர். அதுமாத்திரமல்ல நமது தேவன்,

**'சொன்னதைச் செய்யுமளவும் கைவிடாத தேவன்'**

எனவே கவலைப்படாதீர்கள்.

**ரோமர்** 8:30 எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!

யாக்கோபை முன்குறித்து, தெரிந்து கொண்ட தேவன், உங்களையும் தெரிந்து கொண்டார். உங்களைக் கொண்டு செய்யும் படியாக அவர் திட்டமிட்ட காரியங்களை உங்களைக் கொண்டு தான் செய்வார். ஒருவேளை தற்போது சூழ்நிலைகள் மாறாக காணப்படலாம். ஆனால் தேவன் சொன்னதை கட்டாயம் செய்வார். மனிதர்கள் செய்வேன் என்று வாக்குக் கொடுத்து மாறிப் போகலாம். ஆனால் **"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல".**

**ரோமர்** 8:28 அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

எனவே பிரச்சனைகள் நடுவே சோர்ந்துபோகாமல் எனக்கு **சொன்னதை செய்யும் தேவன்** என்னோடு இருக்கிறார். அவர் சித்தம் செய்வேன் என்று ஒப்புக் கொடுப்பீர்களா ? யாக்கோபைப் போல பொருத்தனை செய்வீர்களா ?

தேவன் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

**நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.**

என்று தேவன் வாக்குக் கொடுக்கிற அதே சமயம் வேதவசனம் கூறுகிறது: **1நாளா.**28:9 நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.

**சங்.**9:10 கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீ கைவிடுவதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.

ஆம்! கர்த்தருடைய நாமத்தை அறிந்திருக்கிற நீங்கள் அவரையே நம்பியிருங்கள். போராட்டங்களை கண்டு சோர்ந்து போகாதீர்கள். எப்பொழுதும் கர்த்தரோடிருங்கள். அப்பொழுது அவர் உங்களோடிருப்பார். நண்பர்கள் கைவிட்டாலும், நம்பினவர்கள் எதிர்த்து வந்தாலும் கர்த்தர் உங்களை கரம் பற்றி நடத்திச் செல்வார்.

**பக்தன் பாடுகிறார்:–**

**கலங்காதே மகனே,**
**கலங்காதே மகளே,**
**என் இயேசு கைவிடமாட்டார்**
**உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்**
**உங்கள் கவலைகள் கண்ணீர்**
**எல்லாம் மறைந்து விடும்.**

**உபா.**31:8 கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்.

ஆம்! யோசுவாவோடே இருந்த தேவன் உங்களோடும் இருக்கிறார். பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்:–

**கர்த்தர் தாமே எனக்கு முன்பாகப் போகிறவர்; அவர் என்னோடே இருப்பார்; அவர் என்னை விட்டு விலகுவதுமில்லை, என்னைக் கைவிடுவதுமில்லை; நான் பயப்படவும் கலங்கவும் மாட்டேன்.**

**கர்த்தர் எனக்குச் சொன்னதை செய்யுமளவும் என்னை கைவிட மாட்டார்.**

இப்படி உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யும்போது ஆதி.28:15

**நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும்உன்னைக் கைவிடுவதில்லை.**

என்ற வாக்குத்தத்தத்தின்படி கர்த்தர் தாமே உங்களோடிருந்து ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

***ஆமென்!***

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு "100 - கிராம ஊழியம்"** திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## காஞ்சிபுரம் - மதுராந்தகம் யூனியன் 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2009 மார்ச் 9** திங்கள் காலை 9 மணி முதல் **மார்ச் 13** வெள்ளி இரவு 10 மணி முடிய **காஞ்சிபுரம் மாவட்டம் – மதுராந்தகம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 மார்ச் 9** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 மார்ச் 13** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 மார்ச் 9 - 13 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**குளோபல் பிளசிங் சென்டர்,**
**பவர் ஏ.ஜி.சர்ச்,**
**மெயின் ரோடு (ஸ்டேட் பேங்க் அருகில்)**
**மதுராந்தகம் - 603 306. காஞ்சிபுரம் மாவட்டம்.**
**போன் : 044 - 27552152**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **Rev. ஏசுதாஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# விருதுநகர் மாவட்டம் - திருச்சுளி யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையால் விருதுநகர் மாவட்டம் – திருச்சுளி யூனியனில் 19.01.2009 திங்கள் முதல் 23.01.2009 வெள்ளி வரை **100**–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, பார்சல் செலவுகளை **திருச்சுளி** A.G.சபை **பாஸ்டர் ஜீவானந்தம்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 54 கிராம ஊழியர்கள் இந்த ஊழியத்திற்கு வந்திருந்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் திருச்சுளி யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் Bro.P.T. **கிறிஸ்டோபர்** மற்றும் காரியதரிசி Bro. **ஸ்டீபன் கிறிஸ்டோபர்** அவர்களும் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபித்தார்கள். திருச்சுளி A.G.சபை **பாஸ்டர் ஜீவானந்தம்** தேவசெய்தி கொடுத்தார்கள். இதன்பின் கிராம ஊழியர்கள் 12 குழுவாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவுக்குப் பின் கிராம ஊழியர்கள் குழு குழுவாக ஜெபித்து கிராமங்களுக்குள் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் போய் 5 நாட்கள் கிராமங்களில் தங்கிக் கொண்டு, அங்குள்ள வீடுகளில் வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம் வீதம் இலவசமாக வழங்கி இயேசுவை அறிவித்தார்கள். 11,785 சுவிசேஷப் புத்தகங்களும்,19,000 கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக் கொடிகளும் வழங்கப்பட்டது.

ஊழியங்களை முடித்து மீண்டும் முன்பு கூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து, கிராமங்களில் கர்த்தர் தங்களை பயன்படுத்திய விதத்தை சாட்சியாகக் கூறி,ஊழிய அறிக்கைகளை சமர்ப்பித்தார்கள். இந்த ஊழியத்தின் மூலம் சந்தித்தவர்களின் 199 புற மதத்தினர்கள் தங்கள் விலாசங்களைக் கொடுத்து தபால் மூலம் வேதபாடங்கள் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

இதன்பின் கிராம ஊழியர்கள் யாவருக்கும் பிரயாணப்படியும், இனிப்பும் வழங்கப்பட்டது. இரவு உணவுக்குப் பின் அவரவர் தங்கள் ஊர்களுக்கு திரும்பி சென்றார்கள்.

## கிராம ஊழியர்களின் சில அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோதரி கிரேஸ் பத்மா, அன்னக்கிளி, ஜெபமணி, லூயிஸ்,**

மேலேந்தல், விடத்தக்குளம், வி.புதுார், நல்லத்தரைக்குளம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் மற்றும் கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகள் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். இதே போல மிதிலைக்குளம், புளியங்குளம், இலுப்பைக்குளம் ஆகிய கிராமங்களிலும் ஊழியம் செய்தோம். இங்கு அநேகர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஆர்வமாக

கேட்டு தங்களை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தார்கள். இந்த ஊர்களிலுள்ள மக்கள் இரட்சிக்கப்பட ஜெபித்துவிட்டு வந்தோம். 1010 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 2:</u> சகோதரி கஸ்தூரி, மரியாள், மேரி மீனா, ரூத் பகவதி.**

தமிழ்பாடி என்ற கிராமத்தைச் சுற்றியுள்ள 12 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். **சாமிநத்தம்** கிராமத்தில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்களிடம் இது சாமிநத்தம் கிராமத்திற்கு செல்லும் வழி தானே என்று கேட்க அவர்களும் ஆமா நீங்கள் யார்? என்று கேட்டதும், நாங்கள் இயேசு கிறிஸ்துவை அறிவித்து, அவரைப் பற்றிய புத்தகங்களைக் கொடுக்க வந்தோம் என்று சொன்னோம். அவர்கள் அப்படியா உங்களைக் கண்டாலே எங்களுக்கு ஆகாது. நீங்கள் இயேசு ஆட்கள் என்று தெரிந்திருந்தால் நாங்கள் வழியே சொல்லியிருக்க மாட்டோம் என்று சொல்லி போங்க, போங்க அந்த கிராமத்தில் உங்களை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றனர். நாங்கள் ஜெபித்துக் கொண்டே போய் அக்கிராமத் திலுள்ள யாவருக்கும் யோவான் புத்தகம் கொடுத்தோம். எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் வாங்கிக் கொண்டு, சத்தியத் தையும் ஆர்வமுடன் கேட்டனர். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். 935 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 3:</u> சகோதரி டோராலாசர், சீலா, அந்தோணிமேரி, அமிர்தம், அன்னாள்**

திருச்சுளி கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள 7 கிராமங்களிலும் இயேசு நல்லவர், வல்லவர், இரக்கம் நிறைந்தவர், நம்மைப் படைத்தவர், சமாதானம் சந்தோஷம் தருகிறவர் என்று சொல்லி யோவான் புத்தகங்களைக் கொடுத்தோம். யாவரும் அன்புடனும், பயபக்தியுடனும் வாங்கினார்கள். ஒருவர் புத்தகத்தை வாங்கி சட்டைக்குள்ளே வைத்து, நெஞ்சுக் குள்ளே இயேசுவை வைத்திருக்கிறேன் என்றார். சில வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங் களும், 750 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 4:</u> சகோ.இஸ்ரவேல், இஸ்தாக்கி, ஸ்டீபன்ராஜ், எபிநேசர், யோசுவா.**

நாங்கள் 8 கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். ஆண்களும், பெண்களும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டனர். சிறுவர்களுக்கு சிலுவைக்கொடி கொடுத்தபோது, அதை வாங்கி உயர்த்திப் பிடித்து மகிழ்ச்சியோடு நடந்தார்கள். இப்பகுதிகளில் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 5:</u> சகோ.மாற்கு மாரியப்பன், அந்தோணி,மகாராஜன், பாபுசாலமோன்.**

நார்த்தம்பட்டி, முத்துராமலிங்கபுரம், கரிசல்குளம் போன்ற கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்டு, அநேகர் தங்கள் பிரச்சனைகளைக் கூறி ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தோம். கல்லூரணி கிராமத்தில் மட்டும் சிலர் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கி, தூர வீசி எறிந்தனர். 875 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 6:</u> சகோதரி எஸ்தர், செலின், கிருபா, தெபோராள், மலர்கொடி.**

10 கிராமங்களுக்கு சென்றோம். ஒரு பெண்ணிடம் சுவிசேஷம் சொன்ன போது, அவள் எங்கள் வீட்டுப் பக்கம் இயேசுவை கும்பிடும் கூட்டம் இருக்குது. நான் அந்த நிழலைக் கூட மிதிப்பதில்லை என்று கூறியபோது, அருகிலிருந்த ஒரு பெரியவர் **'அப்படி சொல்லக் கூடாது. புனிதமான அந்த இயேசு தெய்வம் போல உலகிலேயே ஒரு தெய்வமும்**

**இல்லை'** என்று சொன்னார். 985 சுவிசேஷப் புத்தகங்களும், 780 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 7: சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, தேவநேசம், அபியேல் அந்தோணியம்மா, பிரிஸ்கில்லாமேரி.**

மண்டபசாலை ஊராட்சியிலுள்ள 10 கிராமங்களில் ஊழியம் செய்தோம். இக்கிராமங்களில் ஒரு கிறிஸ்தவர் கூட இல்லை. மக்கள் வாஞ்சையாக யோவான் புத்தகத்தை வாங்கினார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் வெகுதூரம் நடந்து சென்று ஊழியம் செய்தோம். அநேக ருக்காக ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: பாஸ்டர் ஆல்வின், சகோ.ஜெபமலைநாதன், இம்மானுவேல், தேவப்பிரகாசம், தாவீது தங்கவேல்.**

7 கிராமங்களுக்கு சென்றோம். மேலக் குருணைக்குளம் கிராமத்தில் போஸ் என்பவர் எங்களைத் தடுத்து இக்கிராமத்தில் எதுவும் கொடுக்கக் கூடாது. இது எங்கள் ஊர் கட்டுப்பாடு என்று, கிராமத்திற்குள் செல்ல எங்களை அனுமதிக்கவில்லை. நாங்கள் அங்கிருந்து கரிசல்குளம் கிராமத்திற்கு சென்று ஊழியம் செய்தோம். இங்கு பலருக்காக ஜெபித்தோம். 1071 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோ.பிரேம்ஆனந்த், சங்கர், ஸ்டேன்லி, பீட்டர் ராமலிங்கம்.**

வேடநத்தம், தம்மநாயக்கன்பட்டி, பரட்டநத்தம் கிராமங்களில் புத்தகத்தை சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். தம்மநாயக்கன் பட்டி கிராமத்தில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து வருவதை கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் கோபத்துடன் வந்து இப்படி உங்கள் மதப் புத்தகத்தை கொடுக்கிறீர்களே நாங்கள் பகவத்கீதை கொடுத்தால் படிப்பீர்களா ? என்றார். நாங்கள் தாராளமாக கொடுங்கள், படிக்கிறோம் என்றதும் ஒன்றும் பேசமுடியாமல் அமைதியாகப் போய் விட்டார். 929 சுவிசேஷப் புத்தகங்கள், 760 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி ரூத்மேரி, லீதியாள், பிச்சையம்மாள், ஜோதிமணி.**

நாங்கள் 10 கிராமங்களுக்கு சென்றோம். அல்லாலப்பேரி கிராமத்தில் ஒரு சாமியாடி வியாதியிலிருந்து சுகம் வேண்டும், எனக்கு உங்க இயேசு சுவாமி சுகம் தந்தால் இயேசு தான் தெய்வம் என்று ஏற்றுக் கொள்கிறேன் என்றார். ஜெபித்து கடந்து வந்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங் களும், 800சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 11: சகோதரி மரியம்மாள், சலோமி சம்மனசு, சமாதானமேரி, பாக்கியம், மாலா**

நாங்கள் 6 கிராமங்களில் ஊழியம் செய்தோம். பரளச்சி கிராமத்தில் 7 வாலிபர்களை சந்தித்து சுவிசேஷம் சொன்னோம். அவர்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற எங்களுக்காக ஜெபியுங்கள் என்று சொன்னார்கள். ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 880 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12: சகோ.ஆரியப்பன், நோவா, சூசைமாணிக்கம், பெஞ்சமின்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் ஜனங்கள் ஆர்வமாக சுவிசேஷப் புத்தகங் களைப் பெற்றுக் கொண்டார்கள். மைலி என்ற கிராமத்தில் ஒருவர் எங்க சாமிக்கும் உங்க இயேசு சாமிக்கும் ஆகாது என்று பயத்தோடு கூறினார். நாங்கள் சென்ற கிராமங்களில் வரவேற்பும் இல்லை, எதிர்ப்பும் இல்லை. 980 சுவிசேஷப் புத்தகங்கள், 720 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## 01.01.2009 அன்று TVGM New Church- ல் நடைபெற்ற புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டம்



ஒவ்வொருவராக புத்தாண்டு
வாக்குத்தத்தம் பெற்று செல்லுதல்



**பாஸ்டர் ஷிபு** குடும்பத்திற்காக
விசேஷித்த ஜெபம்



**சகோ. ஆரோக்கியம்** சிறப்பு பாடல்




சாட்சி: **மனோபிரியா**
TVGM சிறுவர் இல்ல மாணவி

**தேவனுக்கே மகிமை !**

## திருச்சி TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2009** ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறமத நண்பர் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். 2009 மே 31 ம் தேதி ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு (உங்கள் முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள்.

**வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Rev. **மரியலூயிஸ், தர்மபுரி.**

என்னுடைய மகன் டேவிட்டுக்கு நல்ல மனைவி கிடைக்கவும், இளைய மகன்களின் படிப்பிற்கான தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மூத்த மகனுக்கு நல்ல மணமகளைத் தந்தார். மேலும் இளைய மகன்களின் படிப்புத் தேவைகளை அற்புதமாக சந்தித்து, படிப்பை முடிக்க கிருபை செய்தார்.

2. Mrs. **சந்திரசேகர், ஈரோடு,**

என் கணவர் பொறியாளராக வேலை பார்க்கும் இடத்தில் பிரச்சனை அதிகமாக இருந்தது. நான் ஒரு நாள் **'100–கிராம ஊழியம்'** பத்திரிக்கையில் அநேகருக்கு கர்த்தர் செய்த அற்புதங்கள் பற்றி வாசித்துக் கொண்டிருந்தேன். உடனே நானும் பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு கணவரின் பிரச்சனைகளை நீக்கினார்.

3. Sis. **சித்ரா, நாடார் சத்திரம்.**

என் தம்பி வேலைக்கு போகாமல் மனநலம் பாதிக்கப்பட்டது போல் இருந்தான். அப்போது TVGM தலைமை அலுவலகத்திலிருந்து 2 சகோதரிகள் வந்து ஜெபித்து சென்றார்கள். அவர்கள் ஜெபித்து சென்ற 2 நாட்களுக்குள்ளாக தம்பி மறுபடியும் வேலைக்கு செல்கிறான்.

4. Bro. **அன்பழகன், வேலூர்.**

எனக்கு நேர காப்பாளர் பணி கிடைக்க ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நேரக் காப்பாளர் பணி கிடைக்கச் செய்தார்.தேவனுக்கே மகிமை!

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis. **ராதா, திருச்சி.**

நான் 7வது செமஸ்டர் மற்றும் கணக்கு அரியரில் பாஸாக வேண்டும் என்று ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு இரண்டிலும் வெற்றி பெற செய்தார்.

2. Sis. **நாகஜோதி**

நான் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 469 மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற செய்தார்.

3. Sis. **செல்வி, கிள்ளனூர்.**

ஜனவரி மாத பத்திரிக்கையில் வந்த **'இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்'** என்ற வார்த்தை இயேசு கிறிஸ்துவே நேரில் வந்து சொன்னது போலிருந்தது.

### 2009 மார்ச் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திருவண்ணாமலை
யூனியன் : புதுப்பாளையம்
நாள் : 21.03.2009 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**திரு.R.தாஸ்** Rtd.H.M
ALC**அடைக்கல நாதர் ஆலயம்**
ALC **கண் ஆஸ்பத்திரி அருகில்,**
**மெயின் ரோடு,**
**செங்கம் – 606 709.**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**போன் : 04188 - 222890**
**செல் : 9943281640**

# TVGMஆதரவற்ற முதியோர் இல்லம்




கர்த்தருடைய கிருபையினால் திருநெல்வேலி மாவட்டம் – கோடாவிளையில் TVGM மூலம் **'ஆதவற்ற முதியோர் இல்லம்'** கட்டப் பட்டுள்ளது. இங்கு **பாஸ்டர் ஷிபு** அவர்கள் குடும்பமாக தேவப் பணியை செய்து வருகிறார்கள். அங்கு நடக்கும் ஜெபக் கூட்டங்கள் மற்றும் துதி ஆராதனையின் மூலம் சுற்று வட்டார மக்கள் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று வருகிறார்கள். கடந்த ஜனவரி மாதத்தில் **பாஸ்டர் ஷிபு** அவர்கள் TVGM தலைமை அலுவலகத்திற்கு எழுதியிருந்த கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம். வாசித்து தேவாதி தேவனை மகிமைப்படுத்துங்கள். இங்கு நடைபெறும் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

கடந்த 17.01.2009 அன்று கோடாவிளையில் நடந்த **'துதி ஆராதனையில்'** சகோ. இன்பராஜ் என்பவர் கலந்து கொண்டார். அன்று ஜெபம் முடிந்தவுடன் அவர் என்னிடம் வந்து, 'நீண்ட நாட்களாக **நீர் பையில் புண்ணுடன்** காணப்படுகிறேன். அநேக மருத்துவரிடம் சென்று மருந்துகள் சாப்பிட்டும் வியாதி மாறவில்லை. மிகவும் வேதனையோடு இருக்கிறேன்' என்றார். ஜெபித்தோம். மூன்றாம் நாள் **துதி ஆராதனை** முடியும்போது அவர் என்னிடம் **'என் வியாதி குணமாகி விட்டது, கர்த்தர் எனக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார்'** என்று கூறினார். தேவனுக்கே மகிமை.

மேலும் 20.01.2009 அன்று நடந்த **துதி ஆராதனையில்** சகோ. ஞானக்குமார் என்பவரின் தாயார் மற்றும் அவரது சகோதரிகள் கலந்து கொண்டார்கள். என் மகன் கடந்த 10 மாதங்களாக **அல்சர்** வியாதியினால் வேதனைப்படுகிறான். இந்த வியாதிக்காக அநேக மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. என் பிள்ளை இந்த வியாதியினால் மிகவும் வேதனைப்படுகிறான் என்று தாயார் கண்ணீரோடு கூறினார்கள். நாங்கள் ஜெபித்தோம். 21.01.2009 அன்று **துதி ஆராதனை**க்கு வரும்போது அவர்கள் நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். என் மகன் போன் பேசும்போது 'வியாதி குணமானது, மருந்து சாப்பிடுவதில்லை என்றான்'. கர்த்தர் அற்புதம் செய்தார் என்று கூறினார்கள். தேவனுக்கே மகிமை!

## துதியுங்கள்! ஜெபியுங்கள்! அறிமுகப்படுத்துங்கள்!

1. கோடாவிளை TVGM ஆதவற்ற முதியோர் இல்லத்தில் பணி செய்யும்படியாக கர்த்தர் **பாஸ்டர் ஷிபு** அவர்கள் குடும்பத்தை தந்தார். இதற்காக தேவாதி தேவனைத் **துதியுங்கள்.**
2. முதியோர் இல்லத்திற்கு தேவையான பர்னிச்சர் மற்றும் பொருட்கள் வாங்கப்பட, இதன் மூலம் அநேக ஏழை, ஆதரவற்ற முதியோர்கள் பயன்பெற **ஜெபியுங்கள்.**
3. உங்கள் அருகிலுள்ள அல்லது உங்களுக்கு தெரிந்த ஏழை, ஆதரவற்ற முதியோர் ( பெண்கள் ) இருந்தால் எங்களுக்கு **அறிமுகப்படுத்துங்கள்.**

# இலங்கைக்கு சமாதானம் இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே!

இலங்கை தேசத்தில் நடைபெற்று வரும் ஒவ்வொரு சம்பவங்களையும் தொலைகாட்சி மூலமாகவும், தினசரி பத்திரிக்கை வாயிலாகவும் நாம் அறிந்து வேதனையோடு ஜெபித்து வருகிறோம்.

நான் 08.02.2009 ஞாயிறு அன்று கொழும்புக்கு சென்றிருந்த போது யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படிப்பட்ட உதவியை நாம் செய்யலாம் என்று கேட்டபொழுது, அவர்கள் சொன்ன பதில் என்னை திடுக்கிட வைத்தது.

என்னவெனில், இலட்சக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேற முடியாமல் சுற்றிலும் காவலில் வைக்கப்பட்டு, பசியும் பட்டினியுமாக வாடுகிறார்கள். எந்த தொண்டு நிறுவனமும் உள்ளே போக முடியாது என்பதாக. எத்தனை கொடூரம்! அப்பாவி மக்கள் படும் பாடுகள்.

இதற்கெல்லாம் ஒரு விடிவுகாலம் **இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே.** எவ்வளவுக்கெவ்வளவு ஒடுக்கப்படுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு விசுவாசத்தில் அவர்கள் வளரும்படி நாம் ஜெபிப்போம்!

மேலும் சகோ. ஜாய் தர்மபாலா அவர்கள் நீர்கொழும்பில் 2 வீட்டிற்கு ஜெபிக்க என்னை அழைத்து சென்றிருந்தார்கள். அதில் ஒரு குடும்பம் கிறிஸ்துவை புதிதாக அறிந்து வருபவர்கள். அவர்களுக்கு ஆலயம் செல்வதின் அவசியத்தை எடுத்துக் கூறி, மகளுக்கு இருக்கும் வயிற்று குத்தெடுப்பு வியாதி நீங்கும்படியாக ஜெபித்து வந்தேன்.

மிக முக்கியமாக, இரண்டாவது ஒரு வீட்டிற்கு இரவு 10 மணிக்கு மேல் அழைத்து சென்றார்கள். அவர்கள் பாகிஸ்தானிய போதகர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மொத்தம் 5 பேர். பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள், ஊழியர்கள் ஒடுக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு வந்ததால் **செஞ்சிலுவை** சங்கத்தார் மூலம் இலங்கை தேசத்தில் அடைக்கலமாக பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் தாங்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டோம் என்ற காரியத்தை என்னிடம் ஆங்கிலத்தில் பகிர்ந்து கொண்டார்கள். கடைசியாக அவர்கள் உருது பாடல் பாடினார்கள். ஜெபித்து கடந்து வந்தேன்.

இவர்களுடைய அவசர முக்கிய தேவை எது என நான் கேட்ட போது, முதலாவது உங்கள் ஜெபம், இரண்டாவது தன்னுடைய மகன் இலங்கையில் ஆறாம் வகுப்பு ஆங்கிலப் பயிற்சி போதனா மொழியில் தனிப்பட்ட பள்ளியில் படிக்க பண உதவி தேவையென ஜெபிக்கும்படி கூறினார்கள்.

சகோதரன் ஜாய் அவர்களிடம் நான் தனியே வந்து பள்ளிக்கூட தேவை எவ்வளவு என கேட்டபோது, உத்தேசமாக முதல் கட்டமாக ரூ.21,000/ பீஸ் கட்ட வேண்டும். பின்பு மாதந்தோறும் ரூ.4000/– மும் கட்ட வேண்டுமென கூறினார்கள். இவர்களுக்காக நாம் ஜெபிப்போம். **தேவனுக்கே மகிமை!**

**P.T. Christopher, Founder TVGM- Trichy**

# ஒரிஸாவை நேசியுங்கள்!
# ஒரிஸாவிற்காக ஜெபியுங்கள்!

கடந்த 2008ம் ஆண்டு ஒரிஸாவில் கந்தமால் மாவட்டத்திலும் மற்றும் மாவட்டங்களிலும் கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்பட்டு, விரட்டப்பட்டு ஆலயங்கள் நொறுக்கப்பட்டதை நாம் தொலைக்காட்சி மூலமாகவும், தினசரி பத்திரிக்கை மூலமாகவும் கேள்விப்பட்டு ஒவ்வொரு சபைகளிலும் விசேஷித்த ஜெபங்கள் ஏறெடுத்தோம். அநேகர் அங்கு பணிபுரியும் ஸ்தாபனத்தின் மூலம் முடிந்த உதவியை செய்தார்கள்.

தற்சமயம் சேலம் **Jesus Mercy Home Associations** ஸ்தாபகர் பாஸ்டர் ஜோசப் அவர்கள் இன்று காலையில்(11.02.2009) எனக்கு போன் செய்து ஒரிஸாவைக் குறித்த ஒரு பெரிய பாரம் அவர்களை நெருக்கி ஏவுவதாகவும், ஆதலால் சபை மக்கள் மூலம் தங்களால் இயன்ற ஒரு தொகையை சேகரித்து வைத்திருப்பதாகவும், அதை எப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவு செய்வது என்று தெரியவில்லை எனவும் அதற்கு டி.வி.ஜி.எம். உதவி தேவை எனவும் பாரத்தோடு கூறினார்கள்.

கடந்த மாதத்தில் சகோ. ஜெப் அவர்களும் தன்னுடைய 70 வது வயது பிறந்த நாளை கொண்டாட மனமில்லாமல், ஒரிஸாவில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்காக தன்னுடைய தலை மயிரை சிரைத்து மொட்டையாக காட்சியளித்து, அன்றைக்கு செலவளிக்க வேண்டிய விருந்துக்குரிய பணத்தை என்னுடைய கையில் தந்து, கர்த்தர் வழிநடத்துகிறபடி ஒரிஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஆதலால் கர்த்தருக்குச் சித்தமானால் 2009 பிப்ரவரி 20 - 28 வரை 100–கிராம ஊழியர்கள் ஜெபித்து, என்னையும், மகன் ஸ்டீபனையும் ஒரிஸாவிற்கு அனுப்பும்படி ஒழுங்கு செய்துள்ளேன். நீங்களும் ஜெபியுங்கள்! நானும், என் மகனும் ஒரிஸா போய், சில ஸ்தாபனங்களை சந்தித்து பேசி எப்படிப்பட்ட உதவிகள் செய்யலாம் என ஆலோசித்து, திரும்பி வருவோம்.

அதன்பின்பு, பாஸ்டர் ஜோசப் அவர்கள் குழுவினர் செட்டிப்பட்டியிலிருந்து ஒரிஸாவிற்கு புறப்பட்டுச் செல்வார்கள். கர்த்தர் அவர்கள் பிரயாணங்களையும் உதவிகளையும் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

டி.வி.ஜி.எம். மூலம் எப்படிப்பட்ட உதவியை செய்ய விரும்புகிறோம் என்பதை அடுத்த மாதப் பத்திரிக்கையில் உங்களுக்கு எழுத விரும்புகிறேன்.

ஒரு வேளை மிக அவசரமாக ஒரிஸா ஊழிய விபரத்தை அறிய விரும்பினால், 2009 பிப்ரவரி 28ம் தேதி எங்களுக்கு ஈமெயில் கொடுத்து, அறிந்து கொள்ளுங்கள். மிக முக்கியமாக ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**Date: 12.02.09** **P.T. Christopher**

## 2009 ஜனவரி - கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலக ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 2009 ஜனவரி மாதம் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். பல வருடங்களாக ஜெபித்து முயச்சித்த குளத்துவிளை அறிமுகப்பணிக்கான வாசலை கர்த்தர் சபையில் திறந்து தந்தார். சபை குருவானவர் மற்றும் சபை கமிட்டி மிகவும் ஆதரவு அளித்தார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. இன்னும் ஓரிரு சபைகளில் முயற்சி செய்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த வருட இறுதியில் தடைப்பட்டிருந்த சுவிசேஷ ஊழியம் மீண்டும் தொடர கர்த்தர் கிருபை செய்தார். புதிதாக ஒரு தாயார் இணைந்துள்ளார்கள்.

மார்ச் 2008ல் **'தரிசனமுகாம்'** மூலம் எழுப்பப்பட்ட 10 ஜெபக்குழுவினர் தொடர்ந்து ஜெபிக்கிறார்கள். அந்த ஜெபங்கள் எங்களுக்கு ஆசீர்வாதமாக உள்ளது.

2009ம் ஆண்டில் மேலும் **தரிசனமுகாம்கள்** நடத்தவும், **100**–கிராம ஊழியம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூலை மாதம் நடத்தவும் ஜெபித்து வருகிறோம். தங்களது ஜெபத்தையும் நாடுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

## அறிமுகப்பணி அலுவலகத்தின் தேவைக்காக ஜெபியுங்கள்

2007ம் வருடம் மார்ச் மாதம் TVGM அறிமுகப்பணி அலுவலகத்திற்கு அத்தியாவசியமாக ஒரு வாடகை வீடு தேவையாக இருந்தபோது, கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இப்போது இருக்கும் வீடு கிடைத்தது. 1995ம் வருடத்திலிருந்தே ஒத்தி / வாடகை வீடுகளில் தான் அலுவலகம் இயங்கி வருகிறது. எனவே சொந்த வீடோ அல்லது நம் வசதிக்கேற்ப கட்டிக் கொள்வதற்கு நிலமோ கிடைத்தால் நல்லது என ஜெபத்துடன் முயற்சிக்கிறோம். தேவன் ஒரு அற்புதம் செய்து சொந்தக் கட்டடம் தரும்படியாக ஜெபியுங்கள்.



இரண்டாவதாக தூர இடங்களுக்கு ஊழியங்களுக்கு போய் வரவும், அறிமுகப் பணிக்காக செல்லும் போது அறிமுகப் பொருட்களை கொண்டு செல்லவும், சுவிசேஷ ஊழியங்களுக்கு செல்லும்போது சுவிசேஷப் புத்தகங்கள் கொண்டு செல்லவும் ஒரு **'4 சக்கர வாகனம்'** இருந்தால் மிகவும் உதவியாக இருக்கும் என நினைக்கிறோம். கர்த்தருக்குச் சித்தமானால் **தேவனே அதை வாய்க்கப் பண்ண** உங்களது ஜெபம் தேவை. எனவே இந்த இரண்டு தேவைகளையும் மனதில் வைத்து TVGM ஊழியங்களை நேசிக்கும் தேவபிள்ளைகள் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
ஒருங்கிணைப்பாளர்.

**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்** **'கிறிஸ்தவ தலைமைத் துவப் பயிற்சி'** நிலையத்திற்கு கர்த்தர் தமக்கு சித்தமான **பெயரை** வெளிப்படுத்தவும், நோக்கங்கள், சட்டத் திட்டங்கள் எழுதப்பட்டு டிரஸ்ட் பதிவு செய்யப்படவும், நிலங்கள் டிரஸ்ட் பெயரில் வாங்கப்படவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** TVGM ஊழியத்தில் மார்ச் **31** கணக்கு முடிக்கும்போது, எந்தவித கடனும் இல்லாமல் முடிக்கப்பட்டு, தொடர்ந்து அக்கவுண்ட் எழுதுவதற்கு தேவன் தமக்கு சித்தமான நபரை கொண்டு வரும்படியாக ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM புதிய கமிட்டியில் தரிசனம் பெற்ற தேவப்பிள்ளைகள் இணைக்கப்பட, தலைமை அலுவலகப் பணிக்கு தேவன் தமக்கு சித்தமானவர்களைக் கொண்டு வர ஜெபியுங்கள்.

**வியாழன்:** TVGM டிரஸ்ட்டுக்கு FCRA ஆர்டர் கிடைக்கவும், சோஷியல் சர்வீஸ்க்கு 80G ஆர்டர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM தலைமை அலுவலகத்திலுள்ள சமூக சேவை நிலத்தில் **'100 திக்கற்ற சிறுவர்கள்'** தங்கிப் படிக்க வசதியான கட்டடம் கட்ட கர்த்தர் நம் விசுவாசத்தை பெருகப் பண்ண ஜெபியுங்கள்.

**சனி:** இலங்கை தேசத்தின் சமாதானத்திற்காகவும். நம் தேசத்தின் தலைவர்கள் நீதியோடும், நியாயத்தோடும் தேசத்தை அரசாளவும், ஒரிஸாவில் உபத்திரவப்படுகிற மக்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TVGM ஊழியத்திற்கு ஜெபிக்கிற, கொடுக்கிற மக்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், TVGM அறிமுகப் பணியார்கள், அலுவலகப் பணியாளர்களுக்கு நல்ல சுகபெலன் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

## அவசர ஜெபக்குறிப்பு

**நாகர்கோவிலில்**

**வாத்தியார்விளை / கிரவுண் தெரு**

***அருகில் வாடகை வீடு தேவை!***

நம்முடைய TVGM அறிமுகப் பணி அலுவலகம் இயங்கி வரும் வீட்டை காலி செய்து தரும்படி வீட்டு உரிமையாளர்கள் வேண்டுகோள் கொடுத்துள்ளார்கள்.

ஆதலால் மிக அவசரமாக நமக்கு ஒரு நிரந்தர வீடு தேவைப்படுகிறது. கர்த்தருக்குச் சித்தமானவர்களின் கண்களில் கர்த்தர் தயவை கட்டளையிடும்படி கருத்தாய் ஜெபியுங்கள்.

# சிங்கப்பூர் மிஷனெரி பயணம்

கர்த்தருடைய கிருபையினால் 2009 ஜனவரி 26,27 தேதிகளில் சிங்கப்பூரில் நடைபெற்ற Mission - **LEVITES CAMP -2009** ல் Personal Evangelism பற்றி ஒரு மணி நேரம் செய்தியளிக்க பாஸ்டர் ஜோசப் ஜெபமணி ( ஸ்தாபகர் Yishun Evangelical Church ) அவர்கள், சகோ. பி.டி.கிறிஸ்டோபர் ( ஸ்தாபகர் TVGM, 100-கிராம ஊழியம், திருச்சி ) அவர்களுக்கு வாய்ப்பளித்தார்கள். நன்றி.

இதைத் தொடர்ந்து பல போதகர்கள் மற்றும் ஜெபக்குழுக்கள், (தனிநபர்கள்) தங்கள் கூட்டங்களில் செய்தியளிக்க வாய்ப்பளித்தார்கள்.

2400 சிலுவைக்கொடிகள் தெருக்களிலும், ஜெபக்கூட்டங்களிலும் விநியோகிக்கப்பட்டு, தேவனை மகிமைப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார்.

**தேவனுக்கே மகிமை!**

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை / வாக்குத்தத்த தேவசெய்தி

**நாள் : 01.02.2009** ஞாயிற்றுக்கிழமை

**துதி ஆராதனை நேரம் :** காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை

**வாக்குத்தத்த செய்தி :** மாலை 7 மணி முதல் 8 மணி வரை

**நடைபெறுமிடம் : TVGM தலைமை அலுவலகம், 100 - கிராமம், திருச்சி - 620 102.**

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து

**MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK,**

**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**

**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**

**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER : TRY / 013 / 2009 - 2011
LICENCED TO POST WITHOUT PREPAYMENT NO.:
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லம்


குண்டல்


திருச்சி

2009 ஜனவரி மாதத்தில் திருச்சி சிறுவர் இல்லப் பிள்ளைகளை நேரடியாக பார்வையிட்டு சிறப்பு விருந்தளித்த திருச்சி பொன்னையா ஜெபக்குழுவினர், Reliance Life Insurance குழுவினர், சகோ. ஆல்பர்ட் அவர்களுக்கும் மற்றும் விருந்தளிக்கும்படி காணிக்கை அனுப்பிய திருமதி ஜாய், வசந்தாள் சோமன் அவர்களுக்கும், பிள்ளைகளுக்கு இனிப்புகள் வழங்கிய சகோதரி ரேச்சல் பால் ( லண்டன் ) அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. **கர்த்தர் இவர்களை ஆசீர்வதிப்பாராக!**

## TVGM தலைமை அலுவலக முகவரி

**ஜெபஉதவி மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**
MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

*Website :*
www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി _ हन्ड्रेड विलेज मिनिस्ट्री